# வர்த்தக முன்மொழிவுக்கான அழைப்பு

## இளைஞர் தொழில்முனைவு மேம்பாட்டுத் திட்டம்

### சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டம் (SARP)

உலர் வலயப் பகுதிகளில் உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்தும் அதேநேரம் சிறு அளவிலான விவசாயிகள் இடையே வறுமையை குறைக்கும் நோக்கில், இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டத்திற்கு (SARP) விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தினதும் (IFAD) இலங்கை அரசாங்கத்தினதும் நிதி அளிக்கப்பட்டுள்ளது.

சந்தையை அணுகுவதற்கு காலநிலை பாதிப்புக்கு உள்ளான பிராந்தியங்களில் மீண்டெழுவை கட்டியெழுப்புதல் மற்றும் சிறியளவிலான விவசாய வர்த்தகத்தை முன்னெடுப்பதில் இந்தத் திட்டம் அவதானம் செலுத்துகிறது. அநுராதபுரம், வவுனியா, மன்னார், புத்தளம், குருநாகல் மற்றும் மாத்தளை மாவட்டங்களை உள்ளடக்கிய தேதுர ஓயா, மீ ஓயா மற்றும் மாவது ஓயா ஆகிய 3 ஆற்றுப் படுகைகளில் அமைந்துள்ள தேர்வு செய்யப்பட்ட முக்கிய மையப் பகுதிகள் உட்பட பிரதான பூகோள இடங்களை உள்ளடக்கியுள்ளது.

இளைஞர் தொழில்முனைவு மேம்பாட்டு (YED) திட்டத்தின் கீழ், பயிர்நில மேம்பாடு, அறுவடைக்கு பின்னரான செயல்முறை, மற்றும் விவசாய வர்த்தக செயற்பாடுகளுக்கான முதலீட்டுக்கு இளம் தனிநபர்களை SARP ஊக்குவிக்கிறது. தொழில்நுட்ப பயிற்சி, இணை மானியம் (வர்த்தக முதலீட்டு திட்டத்தின் மொத்த செலவின் 45% இற்கு இணையாக அல்லது அதற்குக் குறைவாக அதிகபட்சம் 900,000.00), மற்றும் தேவையெனில், கடன் வசதிகளை பெறுவதற்கு உதவுதல் உட்பட விவசாய வர்த்தக தொழில்முனைவுத் திட்டங்களில் முதலீடு செய்வதை ஊக்குவிப்பதற்கு விரிவான உதவிப் பொதிகளை SARP வழங்குகிறது.

திட்ட அமைவிட பகுதியில் இருந்து 18–40 வயதுப் பிரிவுக்குள் இருக்கும் இளைஞர்கள் 2026 ஒகஸ்ட் 14 ஆம் திகதி (முதற்கட்ட நிறைவு) அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரியில் SARP திட்ட முகாமைத்துவ பிரிவுக்கு (PMU) கிடைப்பதற்கு தமது வர்த்தக முன்மொழிவை பதிவுத் தபால் மூலம் அல்லது கைகளால் சேர்ப்பதன் மூலம் சமர்ப்பிப்பதற்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. தகுதி பெற்ற வர்த்தக முன்மொழிவுகள் விரிவான மதிப்பீட்டு நடைமுறை ஒன்றின் மூலம் தேர்வு செய்யப்படுவதோடு முதலில் வருவதற்கு, முதல் முன்னுரிமை அடிப்படையில் பரிசீரிலிக்கப்படும். தொடர்பு விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

வர்த்தக முன்மொழிவு மாதிரி மற்றும் திட்டப் பகுதிகள் www.sarp.lk என்ற திட்டத்தின் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் என்பதோடு மேலதிக விபரங்களுக்கு 011 277 0986 என்ற இலக்கத்தில் இளைஞர் தொழில்முனைவு மேம்பாட்டு பிரிவை தொடர்பு கொள்ளவும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழல் கருத்திட்டம் (SARP)**
**2/2/1, கந்தவத்த வீதி, பெலவத்த, பத்தரமுல்லை.**
**தொ. பே. :- +94 11 277 0986**
**மின்னஞ்சல் - Info@sarp.lk**